28.01.2019.அ.வ.எண்.290/2007

வா.சா.1 தியாகராஜன்

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

என்னுடைய தாத்தா லோகநாத முதலியாருக்கும் அவருடைய பழனி முதலியாருக்கும் பாகப்பிரிவினை எதாவது ஏற்பட்டதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னுடைய தந்தைக்கு தான் தெரியும். புல எண்.269/2ல் உள்ள 39 ஏக்கர் 19 செண்டு இடத்தை என்னுடைய தாத்தாவும் அவருடைய தம்பி பழனி முதலியாரும் எவ்வளவு விஸ்திரணம் உள்ள சொத்துக்களை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. புல எண்.269/2ல் உள்ள சொத்துக்களுக்கு 30 வருட காலத்திற்கு வில்லங்க சான்றிதழ் நான் போட்டுப் பார்த்தால் கிரைய விவரங்கள் தெரிய வந்துவிடும் என்ற காரணத்தினால் தான் அதனை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. லோகநாத முதலியாரின் காலத்திற்கு பின்னர் அவருடைய வாரிசுகளான என்னுடைய தகப்பனார் சீனிவாசன், நடராஜன் மற்றும் அனுஜியா ஆகிய மூவருக்கும் கிடைக்கப்பெற்றது என்றால் அது குறித்து எனது தந்தைக்கு தான் தெரியும். அவர்கள் மூவரும் லோகநாத முதலியாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பிரித்துக்கெண்டார்களா என்றால் பிரிவிக்கவில்லை. மூவரும் சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வந்தார்களா என்றால் இல்லை. என்னுடைய தந்தை சீனிவாசன் மட்டும் தான் அனுபவித்து வந்தார். லோகநாத முதலியாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவர்களின் மூவரின் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் அதன் காரணமாக எனது தந்தை எனக்கு ஏற்படுத்தி கொடுத்த செட்டில்மெண்டு ஆவணம் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஒரு பனை மரம், ஒரு புளியமரம் மற்றும் ஒரு கிணறு அமைந்துள்ளது. தாவா சொத்தில் உள்ள மரங்கள் நாங்கள் தான் உபயோகித்து வருகின்றோம் பிரதிவாதிகள் அதனை உபயோகிக்கவில்லை. ஆனால் கிணறு மட்டும் பிரதிவாதிகளுக்கும் எங்களுக்கும் பொதுவாக உள்ளது. தாவா சொத்தில் உள்ள கழிவு அறையையும் பிரதிவாதிகளும் நாங்களும் உபயோகித்து வருகின்றோம். தாவா சொத்தை நாங்களும் பிரதிவாதிகளும் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். தாமோதர முதலியார் பழனி முதலியாரின் மகன் ஆவார். அதன் காரணமாக அவர் எனக்கு சித்தப்பா ஆவார். என்னுடைய தாத்தா லோகநாத முதலியார்

என்னுடைய தந்தை சீனிவாசனுக்கும் என்னுடைய சித்தப்பா தாமோதரனுக்கும் தாவா சொத்தை அனுபவித்து வர உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.வ.எண்.305/2007 என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையருடன் நில அளவையர் அவ்வழக்கு சொத்தை அளந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புல எண்.269/2ல் தாவா சொத்தை தவிர வேறு எதாவது சொத்து எனக்கு உள்ளதா என்றால் இல்லை.

(பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க இறுதியாக ஒத்தி வைக்கப்படுகிறது)